1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

**முன்னிலை : திருமதி.S.பொன் மெலிசா B.A., LL.B,**
1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 04ம் நாள் வியாழக்கிழமை

**இ.ம.எண்.5/2024 அதன் அ.வ.எண்.227/2019**

1) பெருமாள் பல்லவராயர் (இறப்பு)
2) P. சந்திரசேகர்
3) P. முத்து ஆனந்தன்
4) P. செல்வம்,
அக்தார்கள், ஸ்ரீபுது அம்மன்
திருக்கோவில், கண்டியப்பேரி ... மனுதாரர்கள் / வாதிகள் / 3, 4 வாதிகளாக கட்சி சேர்க்கப்பட வேண்டியவர்கள்

–எதிர்–

1) சின்னத்துரை
2) சுஜின்ராஜா ... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பாக 25.08.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ராமகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சிவசுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, மனுவுடன் தாக்கல் செய்யதுள்ள பதில் வழக்குரையை ஏற்றுக் கொள்ள அனுமதி அளித்து உத்தரவிடக் கோரி மனுதாரர்களால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன் பிரகாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :–**

அசல் வழக்கானது எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர

உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் 1 ம் மனுதாரர் காலமானபின்பு 2,3 மனுதாரர்கள் கட்சியாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். மேற்படி பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டதற்கு எதிர்மனுதாரர்கள் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி கூடுதல் எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள உண்மைக்கு புறம்பான சங்கதிகளை மறுத்து பதில் வழக்குரை தாக்கல் செய்ய வேண்டியது அவசியம் ஆகும். மேலும் அசல் வழக்கு நிலுவையில் இருந்த சமயம் பல முக்கிய நிகழ்வுகள் மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்றத்திலும், கோட்டாட்சி தலைவர் முன்பும், வருவாய் அலுவலர் முன்பும் காவல் நிலையத்திலும் நடைபெற்றுள்ளது. மேற்படி சங்கதிகளை நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்த பதில் வழக்குரை தாக்கல் செய்ய வேண்டியது அவசியம் ஆகும். எனவே, மனுவுடன் தாக்கல் செய்யதுள்ள பதில் வழக்குரையை ஏற்றுக் கொள்ள அனுமதி அளித்து உத்தரவிடக் கோரி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையின் சுருக்கம்:–</u>**

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்கதக்கதல்ல. எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் 28.03.2023 ம் தேதியில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். அதன்பின்பு சுமார் 2 வருடம் கழித்து அசல் வழக்கினை இழுத்தடிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே, இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4) **<u>இந்த மனுவை பொறுத்தவரை தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர்கள் மனுவுடன் தாக்கல் செய்யதுள்ள பதில் வழக்குரையை ஏற்றுக் கொள்ள அனுமதி அளித்து உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.</u>**

5) இந்த மனுவை பொறுத்தவரை இருதரப்பிலும், வாய்மொழி சாட்சியமோ அல்லது சான்றாவணமோ குறியீடு செய்யப்படவில்லை.

6) இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

7) மனுதாரர்கள் தரப்பில், அசல் வழக்கில் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர் வழக்குரையில் உள்ள சங்கதிகளை மறுத்து மனுதாரர் தரப்பில் பதில் வழக்குரை தாக்கல் செய்ய வேண்டியது அவசியமானது என்றும், வழக்கு நிலுவையில் உள்ள போது நடைபெற்ற நிகழ்வுகள் குறித்தும் தெரிவிக்க வேண்டியது அவசியம் என்றும் கட்சி செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் மேற்படி பதில் வழக்குரை மூலம் தங்களது வழக்குரையில் கூறியுள்ள எந்த சங்கதிகளையும் மறுத்து கட்சி செய்யவில்லை என்பதையும், மேலும் புதிதாக எந்த வழக்குமூலத்தையும் மனுதாரர் உருவாக்கவில்லை என்பதையும், இந்த மனுவினை அனுமதிப்பதினால், புதிய வழக்கு எதுவும் உருவாகபோவதில்லை என்பதையும், வழக்குமூலத்தில் எந்தவித மாற்றங்களும் ஏற்படபோவதில்லை என்பதையும், எதிர்மனுதாரருக்கு எந்தவித இழப்பும் ஏற்பட போவதில்லை என்பதையும் கருத்தில் கொண்டும், நீதியின்பால் நலன் கருதியும் இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, இந்த மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 04ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PON MELISA S

Uploaded on 04.09.2025
Digitally signed by PON MELISA S
Date: 2025.09.04 16:58:59 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

<u>மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> - இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> - இல்லை

PON MELISA S
Uploaded on 04.09.2025
Digitally signed by PON MELISA S
Date: 2025.09.04 16:59:05 +0530

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**<u>இ.ம.எண்.5/2024 அதன்</u>**

**<u>அ.வ.எண்.227/2019</u>**

சீரான/ வரைவு – உத்தரவு

04.09.2025